முருகப்பெருமான் துணை

**மகான் சூதமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.11.2022**, புதன்கிழமை

1. அன்னதான வள்ளல் வடிவாக
அகிலம் காக்க அவதரித்த
மன்னவனே ஞான தேசிகனே
மண்ணுலகில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது துலை திங்கள்
குறைவிலா முப்பான் திகதி புந்தி வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 30 ம் நாள் 16.11.2022 புதன்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு சூதமுனிவர் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உயிர்கொலை நீக்கி வாழ
ஞானமருளும் அரங்கன் வழி
நல்வழி காட்டி பாவம் சேரா
4. பாவம் சேராபாதுகாக்க வல்ல
பரோபகாரம் கொண்ட தனிவழி
அவனியில் ஆன்மீகத்தில் இது
ஆறுமுகனார் தரும் உயர்வழி ஆகும்
5. ஆகவே கலிவாழ் மக்கள்தானும்
அரங்க ஞானி வாழுகின்ற
மிகையான வரம் அருளுகின்ற
மேலவர்கள் இணைந்து சக்தி
6. சக்திவழங்கும் பிரணவக் குடிலை
சகலரும் வணங்கி வர
பக்தி கொண்டு வழிவகையை
பணிந்து வேண்டி வருக
7. வருகவே உலகியல் துன்பங்கள்
வகையறியா விலகி நின்று
தருமமும் தயவும் மிகுந்த நல்
தரணியாக மாற்றம் காண்கும்
8. காண்கவே மக்களிடை மாற்றம்
கடமை கண்ணியம் கட்டுப்பாடென
உண்மை வழிகளாகத் தேறி
உலகில் உழைப்பும் உயர்வுமாகி
9. ஆகியே பாதகச் செயலான
ஆக்கினை லஞ்சலாவண்ய
அகிலத்தை வஞ்சிக்கும் அந்தவித
அனைத்து தீவினைகளும் விலகி

10. விலகி பாதுகாப்புக் கூடும்
வினை அகல மாற்றம் தானாக
ஞாலமதில் அனைவருக்கும் கிட்டி
ஞானிகள் ஆகும் வாய்ப்பு

11. வாய்ப்புநல்கி உலகமக்கள்
வளர்ச்சிப் பணி ஆற்றுகின்ற
மெய் அன்பர்களாகத் தேறுவர்
மொழிந்திட்ட அனுகூல ஆசிமுற்றே

—சுபம்—